அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 386/2012

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி.சா.1 21.01.2026

பெயர் ஜேம்ஸ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1. சர்வே எண் 463/8, 9, 18, 19 ஆகிய சர்வே எண்கள் பிரியா நகரில் வருகிறது என்றால் சர்வே எண் 463/8 பிரியா நகரில் வராது. சென்ற முறை சாட்சியம் அளித்த பிறகு நான் பிரியா நகர் லேயவுட் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண் 463/8 ன் மொத்த விஸ்திரனம் ஏக்கர் 1.8 சென்ட் ஆகும். எனது தாயார் அதில் 33 சென்ட் கிரையம் பெற்ற பிறகு மீதி சொத்து யாருக்கு கிரையம் செய்யப்பட்டது என்றால் பாலன் என்பவருக்கு கிரையம் செய்யப்பட்டது. எனது தாயார் 1971ல் கிரையம் பெற்ற பிறகு பாலன் கிரையம் பெற்றார். சர்வே எண் 463/8 எனது தாயார் கிரையம் பெற்ற பிறகு தான் உட்பிரிவு ஏற்பட்டது என்றால் சரிதான்.

2. 1971 காலத்திற்கு பிறகு எனது தாயார் சொத்திற்கு பட்டா பெற்றாரா என்றால் இல்லை. எனக்கு எப்போது செட்டில்மென்ட் எழுதப்பட்டது என்றால் 1985 ஆகும். 1971 முதல் 1985 காலத்தில் சொத்தில் என்ன வேலை நடந்தது என்றால் விவசாயம் செய்யப்பட்டது. எனது தந்தை எனக்கு கார்டியன் என்பதால் எனது தந்தை பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விவசாயம் செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அனுபவத்தை காட்டும் மின்கட்டண ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண் 395/2012 வழக்கில் நான் வாதியாக எனது தரப்பு ஆவணங்களில் அதை தாக்கல் செய்துள்ளேன். நான் கூறும் பட்டா என் அப்பா பெயரில் இல்லை என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2012 வருடத்திற்கானது என்றால் சரியல்ல. அதற்கு முன்பு இருக்கும் காலத்திற்கும் ஆவணங்கள் உள்ளது. அ.வ.எண் 395/2012 வா.சா.ஆ 1 மற்றும் 2 ஆவணங்களில் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் தொலைந்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2012 வருடத்தில் பட்டா மாற்றம் செய்ய முயற்ச்சி செய்யும்போது எனக்கு தெரியவந்தது. அப்போதே காவல்நிலையத்தில் புகார் கொடுத்து untraceable Certificate பெற்றேன். நான் மனுசெய்து சர்வேயர் மூலம் சொத்தை அளந்து பார்த்தேனா என்றால பார்த்தேன். எப்போது பார்த்தேன் என்றால் தேதி மாதம் குறிப்பிட்டு ஞாபகம் இல்லை, 2012 வருடத்தில் பார்த்தேன். நான் விண்ணப்பித்த சர்வேயர் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சர்வேயர்

அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன். சர்வேயர் அளந்தபிறகு அறிக்கையில் என்ன சர்வே எண் எழுதப்பட்டது என்றால் சர்வே எண் 463/8A ஆகும்.

4. எனது தாயார் எனது பெயரில் எழுதிகொடுத்த 1985 செட்டில்மென்ட் பத்திரத்தில் சர்வே எண் 463/8 என்று தான் சொத்துவிவரம் உள்ளது என்றால் அப்போது சொத்து உட்பிரிவு ஆகவில்லை. பொதுவாக சொத்து பிரிக்கும்போது தான் அதற்கு உட்பிரிவு வழங்கப்படும் என்றால் எனது தாயாருக்கு சொத்து முதலில் பிரித்ததால் சர்வே எண் 463/8A என்றும் பாலன் என்பவருக்கும் 463/8B என்றும் சொத்து பிரிக்கப்பட்டது. 2013 ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கறிஞரின் அறிக்கையில் பிரியா நகர் லேயவுட்டில் வரும் சர்வே எண்கள் கொடுக்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் பிரியாநகர் லேயவுட்டில் சர்வே எண் 463/8 குறிப்பிடவில்லை. வழக்கறிஞரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 463/9 சொத்து எனது தந்தையுடையது என்றால் சரிதான்.

5. சர்வே எண்463/9 சொத்தில் எனது தந்தை ராமதாஸ் என்பவருக்கு பவர் கொடுத்து, ராமதாஸ் பிரியநகர் மனைபிரிவிற்காக விற்பனை செய்துவந்தார். மேற்கூறிய பாலன் என்பவரும் 463/8B பொருத்து ராமதாஸ்க்கு பவர் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. சர்வே எண் 463/8A மற்றும் 8B க்கு பிரியாநகர் லேயவுட் வழியாக தான் பாதைஉள்ளது என்றால் சரியல்ல. தனிபாதை உள்ளது. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞரின் அறிக்கையில் உள்ள பிரியா நகர் லேயவுட் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் என்னவென்றால் சர்வே எண் 463/2, 3A, 3C, 4, 5, 6,7, 9,10 ஆகிய சொத்துகள் உள்ளது.

6. மேற்கூறிய சர்வே எண்களை ராமதாஸ் என்பவர் தான் விற்பனை

செய்துவந்தார் என்றால் சரிதான். அந்த விற்பனை செய்தகாலத்தில் எனது தந்தை உயிருடன் இருந்தார். பிரியாநகர் லேயவுட் ஏற்படுத்தியபோது பிளாட் எண் 215 ல் கலா மற்றும் 217 லில் சுஜாதா இருந்தவிவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்கூறிய விவரம் எனது தந்தைக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2012 வருடத்திற்கு பிறகு தான் எனக்கு சொத்துபற்றிய விவரம் தெரியும் என்றாலும் எனவே தான் 2012 வருடத்தில் பட்டாமாற்றத்திற்கு மனுசெய்தேன் என்றால் சரியல்ல.

7. சுஜாதா வகையரா தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து சர்வே எண் 463/7 என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து சர்வே எண் 463/8 என்றாலும் இரண்டும் வேறுவேறு சொத்துகள் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் சர்வே எண் 463/8 , 8A, 8B க்கு சம்மந்தம் இல்லாததது என்றால் சரியல்ல. சர்வே எண் 463/8 அல்லது 8A, என்பது சர்வேஎண் 463/7 சொத்து தான் என்றால் சரியல்ல. எனவே அ.வ.எண் 386/2012 மற்றும் 387/2012 அனுமதி செய்து தீர்ப்பு வழங்கவேண்டும் என்றாலும், அ.வ.எண் 395/2012 தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வாதியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் தான் கோரியுள்ளேன் என்றாலும் சுஜாதா வகையராவின் ஆவணங்களை ரத்துசெய்ய விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றாலும் இரண்டும் வேறுசொத்து என்பதால் நான் அந்த பரிகாரம் கோரவில்லை.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.